## முதல் அம்ஶம் – பதிமூன்றாவது அத்தியாயம்

---

### ராஜா வேனன் மற்றும் ப்ருதுவின் சரிதம்

===============================

*ஸ்ரீ பராஶர உவாச –*

*த்ருவாச் சிஷ்டம் ச பவ்யம் ச பவ்யாச் சம்புர் வ்யஜாயத|*
*ஶிஷ்டேர் ஆதத்த ஸூச்சாயா பஞ்ச புத்ராந் அகல்மஷாந்||* (1–13–1)

**ஹே மைத்ரேய ! துருவன் சம்பு என்பவளை மணந்து கொண்டு, அவளிடத்தில் ஶிஷ்டி மற்றும் பவியன் என்ற இரண்டு பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டான். அவர்களில் ஶிஷ்டி என்பவன் ஸூச்சாயா என்பவளைத் திருமணம் செய்து கொண்டு ரிபு, ரிபுஞ்சயன், ரிப்பிரன், விருகலன், விருக தேஜஶன் என்னும் ஐந்து பிள்ளைகளைப் பெற்றான்.**

இவர்களில் ரிபு, ப்ருஹதீ என்ற மனைவியினிடத்தில் சாக்ஷூஷன் மற்றும் ஸர்வதேஜஸ் என்ற பெயர்களை உடைய இரண்டு மகன்களைப் பெற்றான். இவர்களில் சாக்ஷூஷன் வருணனுடைய வம்ஶத்தில் பிறந்தவளும், மஹாத்மா வீரண ப்ரஜாபதிக்கு புத்ரியுமான புஷ்கரணி என்பவளை மணம் புரிந்துகொண்டு அவளிடத்தில் ஆறாவது மங்வந்தரத்திற்கு அதிபதியான மநு என்பவனைத் தனக்கு மகனாகப் பெற்றான்.

தபஸ்விகளுக்குள் ஶ்ரேஷ்டரான அந்த மநுவுக்கு வயிராஜன் என்ற ப்ரஜாபதியின் புத்ரியான நட்வளா என்பவளின் கர்ப்பத்தில் குரு, பூரு, ஶதத்யும்னன், தபஸ்வீ, ஸத்யவான், ஶூசி, அக்நிஷ்டோமன், அதிராத்ரன்,ஸூத்யும்னன் மற்றும் அபிமன்யு என்ற மஹாதேஜஸ்விகளான பத்து பிள்ளைகள் பிறந்தனர். இவர்களுள் குரு என்பவன் அக்நேயி என்ற தன் மனைவியினிடத்தில் அங்கன், ஸூமனா, க்யாதி க்ரது, ஆங்கிரா மற்றம் ஶிபி என்ற ஆறு பரம தேஜஸ்விகளான புத்திரர்களைப் பெற்றான்.

குருவின் மூத்த பிள்ளையான அங்கனுக்கு ம்ருத்யுவின் மகளான ஸூநீதா என்பவளிடத்தில் வேனன் என்ற ஒரு மகன் பிறந்தான். மஹாமுநிவர்கள் புத்திர ஸந்ததிக்காக அங்கனின் மகனான அந்த வேனனின் வலது கையைக் கடைந்தனர். இப்படி மஹாமுநிவர்கள் வேனனின் வலது கையைக் கடைந்தபோது அதிலிருந்து ப்ருது என்பவன் தோன்றினான். அந்த ப்ருது மக்களின் நன்மையின் பொருட்டு பசுவின் (தேனுவின்) உருவத்தைத் தரித்துக் கொண்ட பூமியிலிருந்து வேண்டிய பொருட்கள் அனைத்தையும் கறந்து கொடுத்தான்.

இவ்வாறு த்ருவனின் வம்ஶத்தைப்பற்றி ஸ்ரீ பராஶரர் சொல்லிக் கொண்டு வரும் பொழுது மைத்ரேயர் இடையில் குறுக்கிட்டு,

*மைத்ரேய உவாச –*

*கிமர்த்தம் மதித: பாணிர் வேனஸ்ய பரமர்ஷிபி:|*
*யத்ர ஜஜ்ஞே மஹாவீர்ய: ஸ ப்ருதுர் முநிஸத்தம||* (1–13–10)

*"முனிவரே ! வேனனுடைய வலது கரத்தை மஹரிஷிகள் கடைந்தபோது, அதிலிருந்து ப்ருது எவ்விதம் தோன்றினார்? "* என்பதை அடியேனுக்கு விளக்கமாகச் சொல்ல வேண்டுமென்று, ஸ்ரீ பராசர மஹாமுநியை வினவினார்.

ஸ்ரீமைத்ரேயருக்கு ஸ்ரீ பராசர முனிவர் கூறத் துவங்கினார்: *"ஹே மைத்ரேய! ம்ருத்யுவினுடைய மூத்த புதல்வியான ஸுநீதா, அங்கன் என்ற அரசனை மணந்து அவனிடத்தில் வேனன் என்ற பிள்ளையைப் பெற்றாள். அந்த வேனன் ம்ருத்யுவின் தோஷத்தினால் சிறு வயதிலிருந்தே நற்குணங்கள் எதுவுமில்லாதவனாய் மிகுந்த துஷ்ட ஸ்வபாவம் உடையவனாக இருந்தான். அந்த வேனன் அரசனாக முடிசூட்டிக் கொண்டபின் தானே யக்யங்களுக்கு அதீச்வரனென்றும், தன் ராஜ்யத்தில் எவரும் அன்று முதல் யாக யக்ஞாதிகளைச் செய்யக் கூடாதென்றும், தான தர்மங்கள் செய்யக் கூடாதென்றும், ஹோமங்களை வளர்க்கக் கூடாதென்றும் பறையறிவித்தான்."*

இதைக் கேட்ட முனிவர்கள் அனைவரும் திரளாக அரசனான வேனனிடம் சென்று, *"ஹே மஹாராஜரே ! நாங்கள் இந்த தங்களின் தேசத்திற்கும், நாட்டு மக்களுக்கும் நன்மை தரக்கூடிய தீர்க்க ஸத்ர யாகத்தைச் செய்து, யக்ஞேச்வரனான பகவான் ஸ்ரீ ஹரியை ஆராதிக்கின்றோம். யக்ஞ புருஷனான பகவான் ஸ்ரீமந் நாராயணன் அடியோங்கள் செய்யும் வேள்வியினால் திருவுள்ளம் மிக உவந்து, தங்களுக்கு ஸர்வாபீஷ்டங்களையும் நல்கி அருள் பாலிப்பான். எவருடைய ஆட்சியில் யாகாதி நற்கருமங்களாலே யக்ஞேச்வரனான பகவான் புருஷோத்தமன் பூஜிக்கப்படுகின்றானோ, அந்த ராஜாவுக்கு அவ்வெம்பெருமான் எல்லாவித நன்மைகளையும், அனைத்து மனோரதங்களையும் அருள்வான்"* என்று மிகவும் நயமாக எடுத்துரைத்தனர்.

*"என்னைக் காட்டிலும் பூஜிக்கத் தகுந்தவன் வேறு யாரும் இல்லை. யக்ஞேச்வரனென்று நீங்கள் சொல்லுகின்ற அந்த ஹரி என்பவன் யார்? பிரும்மா, விஷ்ணு, சிவன், இந்திரன், யமன், வருணன், குபேரன், வாயு, அக்னி, சந்திரன், சூரியன், பூமி ஆகிய தேவதைகள் அனைவரும், மற்றுமுள்ள சாபாநுக்ரஹ ஆற்றலுடைய எல்லோரும் அரசனுடைய சரீரத்தில் இருக்கின்றனர். அதனால் நாட்டை ஆளுகின்ற மன்னனே ஸர்வ தேவ ஸ்வரூபியென்று சாஸ்த்ரம் சொல்வதை அறிந்த பின்னரே நான் இவ்விதம் கட்டளையிட்டேன்.*

*ஆகையினால் முனிவர்களாகிய நீங்களும் என்னுடைய கட்டளையை ஏற்று அதன் ப்ரகாரம் நடந்து கொள்ளுங்கள். எவ்வாறு மணமான ஒரு பெண்ணுக்கு தன் கணவனின் கட்டளைக்குக் கீழ்படிந்து நடந்துகொள்வது மிகவும் முக்கியமான தர்மமோ, அதைப்போன்றே அரசனாகிய எனது கட்டளைக்குக் கீழ்படிந்து நடந்து கொள்வதே தர்மமாகும்"* என்று முனிவர்களிடம் *வேனன்* கூறினான். *"அரசே! யாகயக்ஞங்கள் செய்வதற்கு எங்களுக்கு அநுமதி அளியுங்கள். தர்மத்தை நாசம் செய்யாதீர்கள். சர அசர ஆத்மகமான ப்ரபஞ்சங்கள் அனைத்தும் வேள்விகளிலே ஹோமத்துடன் செய்யப்படுகின்ற ஹவிஸினாலேயே செழிப்பை அடைகின்றன"* என்று முனிவர்கள் வேனனிடம் கூறினர்.

முனிவர்கள் கூறியதைக் கேட்காமலும் அவர்களின் கோரிக்கையை ஏற்காமலும் மிகவும் பிடிவாதமாக இருந்த வேனனிடம் முனிவர்களுக்கு மிகுந்த கோபம் உண்டாயிற்று.

***"இந்த வேனன், முதலும் முடிவும் அற்றவனும், ஜகத்திற்கெல்லாம் பிரபுவும், யக்ஞ புருஷனும், ஸ்ரீயப்பதியுமான பகவான் ஸ்ரீமந் நாராயணனை அல்லவோ இகழ்கிறான். இவன் அரசனாக இருந்து ராஜ்ய பரிபாலனம் செய்ய லாயக்கற்றவன். இந்த துராத்மாவைக் கொன்றால்கூட நமக்குப் பாபம் துளியும் ஸம்பவிக்காது"*** என்று முனிவர்கள் தங்களுக்குள் ஒருவரோடு ஒருவர் சொல்லிக் கொண்டே மந்திரங்களினால் சுத்தி செய்யப்பட்ட தர்ப்பை புற்களினால் வேனனை அடித்தனர். அந்த வேனன் ஏற்கனவே ஸர்வேஶ்வரனான பகவான் ஸ்ரீமந் நாராயணனையும், அவனது மகிமையைச் சொல்லும் வேதத்தையும், பகவானின் ஆராதனமான யாக யக்ஞாதிகளையும் நிந்திப்பதாகிய அக்னியினால் தகிக்கப் பட்டிருந்ததினால் முனிவர்களின் தர்ப்பை புற்களினால் அடிக்கப்பட்டவுடன் உயிரிழந்து கீழே விழுந்தான்.

வேனன் இறந்து கீழே விழுந்த சமயத்தில் நாற்புறம் மிக அதிகமான தூசியும் தும்பும் பறந்து ஆகாயம் முழுவதையும் வ்யாபித்தது. அப்புழுதி படலத்தைக் கண்ணுற்ற முனிவர்கள், ***"இது என்ன?"*** என்று அருகிலிருந்த மக்களிடம் கேட்டனர். அவர்களும், ***"ராஜ்யத்தில் ராஜா இல்லாததினால் தீனர்களும் துக்கிதர்களுமான மக்கள் திருடர்களாகி பிறருடைய பொருட்களை அபகரிப்பதற்காக வெகு வேகமாக வருகின்றார்கள். அத்தகைய திருடர்களின் கால்களினால் உண்டான புழுதிப்படலமே இது"*** என்று முனிவர்களிடம் கூறினர்.

இதைக் கேட்ட முனிவர்கள் ஆலோசித்து ராஜ்யத்திற்கு ஒரு ராஜா அவசியமென்று தீர்மானித்து சந்ததியற்றவனாகக் கீழே இறந்து கிடக்கும் வேனனின் தொடையைக் கடைந்தனர். அப்படிக் கடைந்தபொழுது வேனனின் தொடையிலிருந்து அவனின் பாபங்களெல்லாம் ஒன்று திரண்டு எரிந்துபோன மரக்கட்டையைப் போன்ற மிகக் கறுத்த நிறமும் கோரமான முகமும் குட்டையான உருவமும் கொண்ட ஒரு மனிதனாகத் தோன்றியது. அந்த குட்டையான உருவம் முனிவர்களைப் பார்த்து, "நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்க, முனிவர்களும் அவனை, ***"நிஷீத (உட்கார்)"*** என்று சொல்ல அவன் ***நிஷாதன்*** என்ற பெயரைப் பெற்றான். இந்த நிஷாதனின் பரம்பரையில் வந்தவர்கள் நிஷாதர்கள் என்று அழைக்கப்பட்டு விந்திய மலைச் சாரலில் வேடர்களாக வாழ்ந்து வரலானார்கள்.

அதற்குப் பிறகு முனிவர்கள் வேனனின் வலது கையைக் கடைந்தனர். அந்தக் கையிலிருந்து அக்நி போன்று ஜொலிக்கின்ற தேஜஸ்ஸையும் மிகுந்த பிரதாபத்தையும் உடையவனுமான ***ப்ருது*** என்ற பெயரைக் கொண்ட ஒரு குமாரன் தோன்றினான். இவ்விதம் ப்ருது பிறந்த உடனே ஆகாஶத்திலிருந்து ***ஆஜகவம்*** என்ற முதன் முதலில் தோன்றிய ஶிவ தநுஸும், சில திவ்யமான பாணங்களும் கீழே விழுந்தன. அப்படி ஆகாஶத்திலிருந்து விழுந்த வில் மற்றும் பாணங்களை ப்ருது கைக்கொண்டான். அப்போது ஸகல பூதங்களும் மகிழ்ச்சியை அடைந்தன. வேனனும் தனது வலது கையிலிருந்து ப்ருதுவைப் பெற்றதால், ***"புத்"*** என்ற நரகத்திலிருந்து நீங்கப் பெற்று, ஸ்வர்க்க லோகத்தை அடைந்தான்.

*(ராஜா வேனன் மற்றும் ப்ருதுவின் சரிதம் தொடரும்)*